மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்லம்மாள் | நாள் | 25.09.2023 |
| கணவர் பெயர் | சுப்ரமணியம் | | |

பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

50) என் பெயரிலுள்ள சொத்திற்கான வீட்டு வரி மற்றும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றிற்கான ரசீதுகள் 2015ம் வருடத்திற்கு பின்னிட்டவற்றை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி சொத்திற்குரிய வீட்டு வரி ரசீது என் மகள் தேவகியின் பெயரில் உள்ளது. ஆரம்பத்திலிருந்தே குடிநீர் இணைப்பும், மின் இணைப்பும் என் பெயரில் உள்ளது.

51) 2015ம் வருடத்திற்கு பின்னிட்டு குடிநீர் கட்டணம் என் பெயரில் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை காண்பிக்க என் பெயரிலுள்ள குடிநீர் கட்டண ரசீதுகள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். ஆனால் என்னிடம் வைத்துள்ளேன்.

52) என் மகள் தேவகியின் பெயரில் நான் அளித்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் ரத்து பத்திரத்தை நகராட்சியில் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் பத்திரத்தையும், அதை ரத்து செய்த ரத்து பத்திரத்தின் அசலையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி இரண்டு அசல் ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால், உள்ளேன்.

53) என் மகள் தேவகியின் பெயரில் நான் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் என் வீட்டிற்கு மேற்குபுறமுள்ள மேற்படி இரண்டு அடி சந்து குறித்து நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. உண்மையில் அவ்வாறு எனக்கு மேற்குபுறமுள்ள இரண்டு அடி சந்து பாத்தியப்பட்டதாக இருந்தால் மேற்படி சந்து குறித்து நான் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும், மேற்படி சந்து எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்பதால் தான் நான் அதை குறிப்பிடவில்லை என்றாலும், சரியல்ல. மேற்படி இரண்டு அடி சந்திற்கு வடக்குபுறம்

எங்களுக்கு இருந்த இடத்தை பிரதிவாதிக்கு பரிமாற்றம் செய்து கொடுத்துதான் மேற்படி சந்தை நாங்கள் வாய்மொழியாக வாங்கிக்கொண்டோம். அதுகுறித்து பின்னிட்டு பிரச்சனை ஏற்படும் என எனக்கு தெரியாததால் மேற்படி சந்து குறித்து நான் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் குறிப்பாக சொல்லவில்லை.

54) நான் சொல்வது போல் மேற்படி இரண்டு அடி சந்தில் குடிநீர் குழாய்கள் பதித்து அதற்கு தரைதளம் ஏதேனும் நான் கட்டியுள்ளேனா என்றால், நான்தான் கட்டியுள்ளேன். எந்த வருடத்தில் அவ்வாறு தரைதளம் கட்டினேன் என்றால், வருடம் சரியாக தெரியவில்லை. ஆனால் சுமார் 30 வருடம் இருக்கும்.

55) மேற்படி இரண்டு அடி அகல சந்தின் அடித்தளத்தில் தான் பிரதிவாதியின் கழிவு நீர் குழாயும் சென்று வருகிறது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. இன்று வரை நான் நகராட்சியில் கட்டணம் செலுத்தி மேற்படி சந்தின் வழியாக கழிவு நீர் குழாய் அமைப்பதற்கு ஏதேனும் அனுமதி பெற்றுள்ளேனா என்றால், தனியாக அனுமதி பெறவில்லை. அவ்வாறு நான் அனுமதி பெற்றிருந்தால் நகராட்சியிலிருந்து என்னுடைய நிலத்தில் தான் மேற்படி பாதாள சாக்கடை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பார்கள் என்றாலும், பிரதிவாதி கடந்த 1989ம் வருடம் நகராட்சிக்கு முறையாக விண்ணப்பம் அளித்து அனுமதி பெற்றிருப்பதால் பிரதிவாதியின் நிலத்தை ஒட்டியுள்ள அவரது சந்தில் அவ்வாறு கழிவு நீர் சாக்கடைக்கான குழாய்கள் அமைத்துள்ளார் என்றாலும், சரியல்ல.

56) நான் நகராட்சியில் அனுமதி கேட்டு அலுவலர்கள் என் நிலத்தை பார்வையிட்டு என் நிலத்தில் பாதாள சாக்கடை அமைப்பதற்கு இடவசதி இல்லை என கூறிவிட்டனர் என்றால், சரியல்ல.

57) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் என் வீட்டிற்கும் வடக்குபுறம் பிரதிவாதியின் காம்பவுண்ட் சுவரும், பாத்ரூமும் உள்ளது என்றால், பாத்ரூம் மட்டும் தான் உள்ளது. காம்பவுண்ட் சுவர் இல்லை.

58) நாங்கள் பிரதிவாதிக்கு பரிமாற்றத்தின் போது 10X10 சதுரடி அளவில் இடத்தை கொடுத்ததாக சொல்லும் மேற்படி இடமானது மேற்படி பாத்ரூமிற்கும் வடக்குபுறத்தில் உள்ளது என்றால், சரியல்ல. தற்போது என் வீட்டிற்கு உள்ள வடக்குபுறத்தில் தான் அந்த இடம் உள்ளது.

59) மேற்படி பாத்ரூமை ஒட்டி வடக்குபுறத்தில் எனக்கு ஏதேனும் இடம் உள்ளதா என்றால், இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் என் வீட்டிற்கு வடக்கில் பிரதிவாதியின் பாத்ரூம் உள்ளதாகவும், மேற்படி பாத்ரூமிற்கு வடக்கில் 10X10 சதுரடி நிலம் உள்ளதாகவும், காட்டியிருந்தால் அது தவறானது என்றால், நான் அவ்வாறு காட்டவேயில்லை.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.